DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 6-2023, 64-2023, 33-2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 38**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். அமர்நாத் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் ை ஹதராபாத்தில் நிசாம் இன்ஸ்டியூட் ஆப் மெடிக்கல் சைன்ஸ் என்ற மருத்துவமனையில் வேலை பார்க்கிறேன். நான் பாண்டிசேரி மகாத்மா காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேலை பார்த்தேன். அர்ஜுன் என்பவருக்கு என்னால் கொடுக்கப்பட்ட காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.68** ஆகும். அவருக்கு கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**6, 7, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**<u>10வது  எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர்  குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**<u>11, 13, 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர்  குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**<u>17 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர்  குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**<u>12, 14, 16 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர்  குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**<u>4, 5, 8, 18 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சிகிச்சை அளித்த அர்ஜுன் என்பவருக்கு இரண்டு கால்களின் முட்டிகளிலும் இரத்தக்காயம் இருந்தது என்று சொன்னால் சரிதான். அவர் இரத்தக்காயங்களுடன் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

(சாட்சியம் காணொலி மூலமாக பதிவு செய்யப்பட்டது)

# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

Sessions Case No. 6/2023, 64/2023, 33/2024

**நாள்:** 04.03.2026

**பெயர் : டாக்டர். சங்கர்**

**PW: 31**

**<u>4, 5, 8, 18 குற்றம்சாட்டப்பட்டவர்கள் குறுக்கு விசாரணை</u>**

**சாட்சி மனு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை காணொலியில் செய்யப்படுகிறார்.**

என்னை ஆய்வாளர் ஒருமுறை தான் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள் என்றால் சரிதான். 18.08.2022ந் தேதி அன்று தான் நான் சடல கூறாய்வு செய்தேன் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரித்தார்கள் தேதி நினைவு இல்லை. என்னை போலிசார் விசாரித்தது 19.08.2022ல் தான் போலிசாரால் விசாரிக்கப்பட்டேன் என்றால் இருக்கலாம். போலிசார் விசாரித்தபோது நான் சடல கூறாய்வு செய்யும் நேரத்தையும், பிரேதத்தை ஒப்படைத்த நேரத்தையும் இறப்பிற்கான காரணத்தை பற்றியும் சொல்லியுள்ளேன் வேறெதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அவருக்கு 11 வெளிபுற காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தொண்டைக்கு கீழே உள்ள முக்கிய உறுப்புகளில் காயங்கள் தென்படவில்லை. தொண்டைக்கு கீழே முக்கியமான இரத்த குழாய்களான தமனி, சிரைகள் ஓடுகின்ற என்றால் சரிதான். தொண்டைக்கு கீழே உள்ள இரத்தக்குழாய்கள் காயப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட 10 காயத்தில் அல்னா என்ற எழும்பு வெட்டுப்பட்டிருந்தது என்றால் சரிதான். 11.02.2026 ந் தேதி என்னை நீதிமன்றத்தில் முதல் விசாரணை செய்கின்றபோது வெளிப்புற காயங்களான 11 காயங்களில் தன்மைகள் குறித்து விபரமாகவும், விளக்கமாகவும் பின்பாயிண்ட் செய்து நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சடல கூறாய்வு செய்கின்றபோது நோட்ஸ் எடுப்பதற்கு ஒரு புக் உண்டு என்றால் சரிதான். அதில் குறிப்புகள் எடுத்துக்கொண்டு வந்து என்னுடைய அறையில் உட்கார்ந்துகொண்டு அ.சா.ஆ.60 தாயரிக்கப்பட்டது. சடலத்தை கழுத்திற்கு கீழே நேராக திறந்து மர்மம்தானம் வரை கிழித்து சடல கூறாய்வு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். பிணவறையில் துப்புறவு தொழிலாளிகளும்,

மருத்துவ பணியாளர்களும் என்னுடைய உதவிக்காக இருப்பார்கள் என்றால் சரிதான். என்னுடைய அறைக்கும் பிணவறைக்கும் 200 அடி துாரம் ஒரே வளாகத்தில் உள்ளது. பாடியை கிழிப்பது நோட்ஸ் எடுப்பது என்னுடைய பணியாளர்கள் தான் எடுப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. 11.02.2026ந் தேதி குறுக்கு விசாரணையில் ஆயுதங்களை காட்டி சரியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் ஆயுதங்களை காட்டி ஆய்வாளர் விசாரிக்கவே இல்லை என்பதால் தான் நான் சரியாக ஞாபகம் இல்லை என்று மழுப்பலாக பதில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

சடலத்தை ஒவ்வொரு பகுதியை பிரித்து எடுத்து பரிசோதனை செய்யும்போது வீடியோ எடுக்கபடலாம் என்றால் ஆய்வாளர் கேட்டுக்கொண்டால் நீதிமன்றம் உத்தரவிட்டால் எடுக்கபடலாம். என்னை அவ்விதம் கோரவில்லை அதனால் நான் எடுக்கவில்லை. CCTV கேமரா பதிவிறக்கம் செய்து ஆய்வாளரிடம் கொடுக்கப்படவில்லை. நாங்கள் துல்லியமாக சடல கூறாய்வு செய்யாததனால் வீடியோ கவரேஜ் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதிகமாக உயர் இரத்தமுத்தம் இருந்தாலும், அதேபோல அவர் ஒரு இதய நோயாளியாக இருந்தாலும் அதிர்வான சம்பவங்களை பார்க்கும் போது அவருக்கு கார்டியாக் அரஸ்ட் ஏற்படகூடும் என்றால் சரிதான்.

இறப்பிற்கு பிறகு காயங்கள் ஏற்பட்டால் இரத்தபோக்கு கம்மியாக இருக்கும் இறப்பிற்கு முன்பு காயங்கள் ஏற்பட்டால் இரத்தபோக்கு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். எந்த குறிப்பிட்ட காயம் உடனடியாக இறப்பை ஏற்படுத்தும் என்று கூற இயலும். சடல கூறாய்வு செய்த நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு பிறகு ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த செய்தி குறித்து முதல் விசாரணையிலும், பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் மண்டையோட்டை திறந்து பிரேதத்தை பரிசோதனை செய்தபோது முடி இருந்ததா அல்லது இல்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் இரத்தக்கசிவு இருந்தது பற்றி கூறவில்லை என்றால் சரிதான். எழுத்து பூர்வமாக History of

case என்னிடம் கொடுத்தார்கள். உயிருடன் இருக்கும்போது காயங்கள் ஏற்பட்டிருந்தால் spatter இருந்திருக்கும். இறப்பிற்கு பிறகு திசுக்களில் ஊடு பரவுதல் காயங்கள் ஏற்படும்போது தோன்றாது என்றால் சரிதான். மிக மிக துல்லியமான கூர்மையான ஒரு பக்கம் நீளமாகவும், மறுபக்கம் மழுங்கலாக இருந்தால் ஏற்படும். அதிர்ச்சியின் வகைகளை பற்றி முதல் விசாரணையிலும், பிரேத பரிசோதனை அறிக்கையிலும் கூறவில்லை என்றால் சரிதான். இந்த காயங்களுடைய அகல நீளத்தையும் ஆழத்தையும் உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்களின் நீளத்தையும் ஒத்திசைத்து சொல்லமுடியாது என்றால் அது குத்து காயத்திற்கு மட்டும் தான் சொல்லமுடியும். நான் இந்த விபரத்தை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சடல கூறாய்வு என்பது சட்ட விதிகளையும், மருத்துவ விதிகளையும் பின்பற்றி சரியாகவும், முறையாகவும் சடல கூறாய்வு செய்யபடமலும் அ.சா.ஆ.60ல் குறிப்பிடபடாமலும் உள்ளேன் என்றும் தவறாக தவறான ஆவணங்களின் அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. FIR கொடுத்ததாகவும், வழக்கின் வரலாற்றை கொடுத்ததாகவும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்சமயம் வழக்கை முன்னேற்றுவதற்காக தற்சமயம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>11, 13, 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போஸ்ட்மார்டத்தில் ரெக்யூசேசன் போலிசார் அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அந்த ரெக்யூசேசனை பார்த்தால் என்னென்ன ஆவணங்கள் எனக்கு அனுப்பப்பட்டன என்பது பற்றி தெரியும். அந்த ரெக்யூசேசன் என்ன ஆகிவிட்டது என்று எனக்கு தெரியவில்லை.

(சாட்சியம் காணொலி மூலமாக பதிவு செய்யப்பட்டது)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 6/2023, 64/2023, 33/2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 37**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். தீரஜ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.03.2026

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்சமயம் பாண்டிசேரி மகாத்மா காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். நான் 2022ம் ஆண்டு PG படித்துக்கொண்டிருந்தேன். அர்ஜீனன் என்கின்ற 27 வயதுடைய 18 ஆகஸ்ட் 2022ம் ஆண்டு 12.20 மணிக்கு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சை பிரிவிற்கு வந்தார். எங்களிடம் சொன்னது டூவிலர் ஆக்சிடன்ட் கடலூர் அருகே 17.08.2022ந் தேதி ஏற்பட்டதாக கூறினார். நாங்கள் பார்த்தபோது அவருடைய வலது கையில் மணிகட்டு அருகில் பீகுலோயிங் காயம் இருந்தது. அவரிடம் இரத்தக்குழாய் அடைப்பு இருக்கலாம் என்று சொல்லி உள்சிகிச்சைக்கு சேர்த்தோம். அந்த AR copy **அ.சா.ஆ.67** ஆகும். நாங்கள் அட்மிசன் போட வேண்டும் என்று சொன்னதற்கு நாங்கள் சென்னை என்றும் செல்ல வேண்டும் என்றும் கூறிவிட்டு சென்றுவிட்டார். சம்மன் வந்தபிறகு தான் என்னை தொடர்பு கொண்டார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**6, 7, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**10வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**11, 13, 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**17 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**12, 14, 16 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**4, 5, 8, 18 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

with arterial injury இரண்டு கால்களிலும் முட்டிகளிலும் இரத்தக்காயங்கள் அர்ஜுனுக்கு இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.67 விபத்து பதிவேடு அதில் அசலுடைய பிரதியான நகல் ஆகும் என்றால் சரிதான். வாகன விபத்து ( RTA) டூவிலர் vs போர்வீலர் என்றால் சரிதான். அதாவது இருச்சக்கர வாகனமும் நான்கு சக்கர வாகனமும் என்பதாகும். அர்ஜுன் மருத்துவ சிகிச்சைக்காக நான் பணியாற்றும் பாண்டிசேரி மகாத்மா காந்தி மருத்துவமனைக்கு 17.08.2022ந் தேதி இரவு 11.00 மணிக்கு வந்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக

தெரியவில்லை. அர்ஜுன் விபத்து நடந்தது 10.00 மணிக்கு நடந்தது என்று சொல்லியுள்ளார் என்றால் அது சரியல்ல. அவர் 10.30 மணிக்கு



விபத்து நடந்ததாக கூறியதையும் இரவு 11.00 மணிக்கு மருத்துவமனைக்கு வந்ததாக கூறியதும் விபத்து பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது ஆனால்அது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பின்னிட்டு திருத்தப்பட்டு நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.67ல் விபத்து குறித்தும் மருத்துவமனைக்கு வந்த நேரம் குறித்தும் தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது அதனை அனுசரித்து நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அமர்நாத் என்ற மருத்துவர் அர்ஜுன் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட பின் அனுமதித்த மருத்துவர் ஆவார். விபத்து பதிவேட்டில் சென்னைக்கு போவதாக குறிப்பிட்டு சொல்லப்பட்ட எழுத்துக்கள் கிடையாது அவர் சென்னைக்கு போவதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் விசாரித்ததாக ஒரு வாக்குமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அதிலும் அவர் சென்னைக்கு போவதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்கள் சொல்லவில்லை என்று சொன்னால் அதுபற்றி என்ககு தெரியாது. நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(சாட்சியம் காணொலி மூலமாக பதிவு செய்யப்பட்டது)